Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOUAYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ஹூ வைகாசி-மீ ௧௧௳ (24—5—34) } No. 26.

திருமந்திரம்

வித்துக்குற் றுண்பான் விளைவறி யாதவன்
வித்துக்குற் றுண்ணாமல் வித்துச்சுட் டுண்பவன்
வித்துக்குற் றுண்பானில் வேறல னிற்றவன்
வித்துக்குற் றுண்ணாமல் வித்துவித் தானன்றே.

அன்னத்தில் விந்து வடங்கும் படிகண்டு
மன்னப் பிராணனும் விந்து மறித்திட்டு
மின்னொத்த விந்துநா தாந்தத்து விட்டிட
வன்னத் திருவிந்து மாயுங்கா யத்திலே.

அன்னப் பிராணனு மார்க்கு மிருவிந்து
தன்னை யறிந்துண்டு சாதிக்க வல்லார்க்குச்
சோன்னமு மாமுருத் தோன்றுமேண் சித்தியா
மன்னவ ரேல்லா மழிவற நின்றதே.

உ
திருவருள் துணை

ம
நந்தி பதி
கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே
(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை,
பவ-ஹு வைகாசி-மீ 11உ

பிரமசரியம்

பிரமசரியம், கிருஹஸ்தம், வானப்ரஸ்தம், சந்நியாசம் என நான்கு ஆச்சிரமங்கள்—நிலைகள் முத்தி நெறியாக அமைந்துள்ளன என்று சுருதிகள் கூறுகின்றன. இவை உலகியலாகிய போலி நிலையிலும் பாரமார்த்திகமாகிய உண்மை நிலையிலும் உள்ளனவாகும். போலியையே உண்மை என நம்பி அமைந்து சாதலடைவது உலகியல். போலியாகிய கற்பனையைக் கொண்டு உண்மை நெறியை நாடி உய்தி பெறுவதே முறையாகும்.

உலகத்திலே பெண்ணைக் கூடி இன்புறாமல் ஆசிரியன் என்பான் ஒருவனிடத்திலே சிலபல நூல்களைக் கற்றுக்கொண்டு சில நடை நொடிகளையும் கைக்கொண்டு ஒழுகுபவனைப் பிரமசாரி என்கின்றனர்.

இந்நிலையிலும் இருவகை உண்டு என்பர். பதினாறு ஆண்டுகள் வரையுமோ பின்னும் சிலகாலமோ பெண்ணைக்கூடி அநுபவிக்காதவனைப் பௌதிகப் பிரமசாரி என்கின்றனர். சாதலடையும் வரை பெண்ணைக் கூடி இன்புறம் பேறு அமையப் பெறுதவனை நைட்டிகப் பிரமசாரி என்கின்றனர்.

பெண் ஒருத்தியை அடைந்து ஒருவாறு குடும்ப வாழ்க்கை நடாத்துபவனைக் கிருஹஸ்தன் என்கின்றனர்.

தம்பதியாகவோ தனியாகவோ காடு சென்று தவம் புரிபவனை வானப்ரஸ்தன் என்கின்றனர்.

மனைவி மக்களைக் கைவிட்டுப் பிரிந்தவனை—மண் பெண் பொன் என்பனவற்றை வெறுத்து ஒருபால் ஒதுங்கினவனைச் சந்நியாசி என்கின்றனர்.

இந் நால்வகை நிலைகளும் தற்காலத்தில் சில மாயினரால் கைக்கொள்ளப்படுகின்றன என்று கூறுவார் பலர்.

சிலர் பிரமசரியம் தற்காலத்தில் முயற்கொம்பு எனவும் மற்றைய மூவகை நிலைகளும் கைக்கொள்ளப்படுகின்றன எனவும் கூறுகின்றனர்.

இவ்வாறு உலகோர் இந்நிலைகளுக்குப் பொருள் கூறி அமைவதோடு வேதமும் இவ்வாறே இவற்றின் இலக்கணங்களைக் கூறுகின்றது எனவும் ஒலமிடுகின்றனர்.

இவர் கூற்றை நோக்குமிடத்து அகத்தகாம உணர்ச்சியாலாய ஆயாசம் புறத்துப் புலனாகாதவாறு கௌபீனத்தைச் சிக்கென யாத்தல் முதலிய வன்செயல்களாலும் சரீர இயற்கைக்கு மாறுபாடான சில உணவுகளால் வீரியத்தைக் கெடுத்தலாலும் சிலகாலம் கழிந்துவிட்டால் முதற்பதம்கிடைத்துவிடும்.

பின் பெண் ஒருத்தியை அடைந்து அவளுடன் சிலகாலம் இணைவிழைச்சில் ஒருவாறு ஈடுபட்டுவிட்டால் இரண்டாம் பதமும் ஆய்விடும்.

பின் மனைவி என்பவளோடு தான் தனியாகத் தான் காட்டுக்குப் போய்த் தலையிலும் முகத்திலும் (மேனாட்டார் போல) கக்கங்களிலும் மயிரை நீட்டி வளர்த்து நகங்களையும் (மிருகங்கள் போல) வளர்த்துக்கொண்டு சிலகாலம் வனவாசம் பண்ணிவிட்டால் மூன்றும் பதமும் ஆய்விடும்.

பின்பு கருவிகள் பலமற்றுச் செயலற்று — செயலுக்கு வலுவில்லாமல் ஒய்ந்து சரீரம் தளர்ந்து பஞ்சேந்திரியங்களும் தம் தம் நிலைகெட்டு நிறை திரிந்து நரை திரை மூப்புப் பிணியால் கவியப்பட்டுச் சிலேத்தும அரசு ஆக்கமுறுங்கால் காவிமண்ணில் தோய்த்த உடையையும் அணிந்து செத்துப் போய்விட்டால் நான்காம் பதமாகிய சந்நியாசமும் ஐந்தாம் பதமாகிய முத்தியும் கிடைத்துவிடும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த பதங்களைப் பெறுதற்காகவே அரிய பெரிய வேதநூல்கள் முழங்குகின்றன என்று கூறுகின்றனர்- அந்தோ ! பரிதாபம் !

இவற்றால் தற்கால உலகம் இவ்வொழுக்கங்களின் வாய்மையான இலக்கணத்தை ஒரு சிறிதும் அறியவில்லை என்பது வெள்ளிடையாகின்றது. ஆதலால் இந்நிலைகளுள் முதற்கண்ணதாகிய பிரமசரிய இலக்கணத்தை ஈண்டு ஒரு சிறிது ஆராய்தல் இன்றியமையாதது.

பின் வரும் பிரபல சுருதிப் பிரமாணங்கள் பிரமசரியத்தின் இலக்

கணத்தை நன்கு புலப்படுத்து
கின்றன :

அதர்வ வேதம் 11-வது கா, 5-சூக்தம்

“பிரமசாரி புவியை அலறச் செய்
“வான். சகத்தையும் சுவர்க்கத்தையும்
“அவன் நிலையாக்கினன். பிரம
“சாரியை குருநாதன் கர்ப்பந் தரித்து
“அவனுக்கு அப்பால் வேறு ஜென்மம்
“அளிக்கிறார். தவத்தாலும் திட
“முயற்சியினாலும் அவனால் செய்ய
“முடியாத வேலையே இல்லை. பிரமா
“விற்கு முன்னர் பிரமசாரி பிறந்து
“தவத்தால் வளர்ந்து தீக்கனலாடை
“யணிந்து சுவர்க்கம் சிவராசி முதலிய
“வைகளை தோற்றுவித்தான், தோல்
“தரித்து நீண்ட தாடியுடன் தரணி
“யின் நான்கு நிலைகளிலும் அவன்
“துரிதமாய்ச் சுற்றுகிறான். பிரமசாரி,
“சகம், சலம், விராஜன், பிரஜாபதி
“பரமேஷ்டியோடு அமுதத்தில்
“அமைந்து இந்திரனாகி அசுரனைக்
“கொன்றான். சிருட்டி செய்த சகங்
“களைக் காப்பவன் பிரமசாரியே.
“அவனிடம் தேவர்கள் எல்லாம் ஒரு
“நிலையிலுள்ளார்கள். பிரமசாரி பிச்சை
“யால் இம்மண்ணையும் விண்ணையும்
“பெற்று வந்தான். அவன் இடிமுழக்க
“மாகி விரகர்ச்சனையுடன் ஆண்மை
“யால் அகிலத்தைத் தாங்கி எங்கும்
“புது உயிரை அளிப்பான். பிரஜாபதி
“வேண்டியதை யெல்லாம் பிரமசாரி
“தன்புனித ஆன்மாவால் அளித்தான்
“பிரமசரியத்தால் ஆடு மாடுகள்
“உணவை அடையும். பிரமசரியத்
“தவத்தால் தேவர்கள் காலனைத்
“துரத்தினார்கள். பிரமசாரியினின்றே
“சோதி, செடி, கொடி, இரவு, பகல்,
“பருவம் முதலியவை புலனாயிற்று.
“சகத்திலுள்ள எல்லா சீவர்களும்
“மாடும், மனிதர்களும், பிரமசரியத்தி
“னாலேயே தோன்றினார்கள். உன்
“தேகத்திலுள்ள மூச்சை, திறந்து
“பவன் பிரமசாரியாகும். எல்லாம்
“நிறைந்துள்ள பிரமாவையே அவன்
“அலறச் செய்வான்.”

ஐதரேய உபநிடத தாற்பரிய வர்ணனம்

“புருஷனிடத்தில் வீரிய வடிவ ஏழா
“வது தாதுவானது “ஓஜம்” எனப்
“பெயரிய எட்டாவது தசையை
“அடையும். ஹ்ருதய தேசத்தின்
“கண் இரா நிற்பதும், மஞ்சள் வரு
“ணத்ததாய்ச் சீவன் வசிக்கும் தான
“மாயுள்ளதும் ஆயதை “ஓஜம்”
“என ஞானவாசிட்டம் கூறும்.
“ஓஜம்” எனப் பெயரிய தசையால்
“இச் சீவன் தேஜசோடு கூடினவ
“னாய்ச் சீவிப்பன். வீரியத்தை நிரோ
“தம் செய்தால் புருஷனை அழகறும்
“படி செய்வதாய ஜரை அவஸ்தை
“யும் சீக்கிரம் அடையமாட்டாது.
“அப் புருஷனுக்கு பெலமும் அழிய
“மாட்டாது. வீரியத்தை நிரோதஞ்
“செய்பவனாகிய ப்ரஹ்மசாரிக்குப்
“பரலோகத்தின்கண் ப்ரஹ்ம லோகப்
“பிராப்தியும் இவ்வுலகின் கண்ணே
“மஹா கீர்த்தியும் உண்டாம்.
“ஆகையினால் வீரியத்தின் நிரோதத்
“தினாலேயே ப்ரஹ்மசாரிக்கு இரு
“வகை உலகும் சித்திக்கும். வீரிய
“நிரோதத்தால் யோகியானவன் ஆகா
“சத்தின் கண்ணே செல்வதற்கும்
“சமர்த்தனாவன்; அணிமாதி அட்ட
“சித்திகளையும் அடைவன். வீரியத்
“தின் நிரோதம் மகா பலத்தின் ஏது
“வாம்.”

வேதத்தை ஓதக் கூடியவர் யார் எனக் கேட்டதற்கு, சௌனக மகா ரிஷி கூறுவதாவது: “இளமையுடன்
“பலமுள்ளவர்களாலேயே அறிய
“முடியும். ஏன்? சொல் என்பது மேல்
“வழியாகவே செல்லும், கீழ் நோக்
“காது. நுவன்யமான சொல் (ஒலி)
“நாபியினின்று மேல் நோக்கி கண்ட
“மெனும் தொண்டையில் வந்து வடி
“வம் பெறும். நிறையோடு கூடிய
“வாழ்க்கை யுடைய பிரமசாரி இளங்
“காளை யாதலால் அவனுக்கு பல
“முண்டு. அவனுடைய வீரியம்(ரேதஸ்)
“மேல் நோக்கும் தன்மை உடையது.
“ஆதலால் அவனே வேதங்களை அறி
“யவும் ஓதவும் போதிய ஆற்றலுடை
யவன்.” (யஜு. 19. 6.)

மேலே கூறியவற்றின் பொருள் என்னை? வீரியத்தை நிரோதம் செய்தல் என்றால் என்னை? ப்ரஹ்ம சரியத்தைக் கைக் கொண்டவனால் வீரிய நிரோதம் செய்யப்பட வேண்டியது எனவும் அஃதே அவ் விரதத்தின் முக்கிய இலக்கணம் எனவும் உலகம் ஒலமிடுகின்றது. நிரோதம் என்னும் சொல்லுக்கு வெளிவிடாதுஅடக்குதல் என்னும் பொருள் உலகத்தவரால் கூறப்படுகிறது ; நம்பப்படுகிறது; அநுட்டிக்கப்படுகிறது. உலகத்தார் கண்டு பிடித்த இவ் அறத்தாற்றைக் கடைப்பிடித்து வழுவற அநுட்டித்த மஹான்கள் எனப்படுவோர்களெபினை சுத்தி பெற்று [அஃதாவது சப்த தாதுக்களில் ஏழாவதானதும் சிவ அம்சத்தைத் தனக்குள் அடக்கி ஜல ரூபமாய்த் திகழ்வதுமான வீரியத்தின் —வீரத்தின்—வீரமெனும் மதத்தின் மகா பலத்தினால் அஃதாவது கிரஹண பரித்தியாகமெனும் தோஷ ரஹிதத்தினால்] ஐதரேய உபநிடதம் கூறுவதற்கு ஒப்ப அணிமாதி அட்ட சித்திகளையும் இருவகை உலக சித்திகளையும் ஆகாயத்தின் கண் செல்லும் சமர்த்தையும் உடையராய் வதிந்தனரா? கிருஷ்ணன் நித்திய பிரமசாரி எனப் போற்றப்படுவது எந்த முறையில்? அவன் தன் ஏழாவது தாதுவை ஏராளமாய் வெளிவிட்டவன் அல்லவா? உலகத்தவரால் கண்டு பிடிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமாகிய “பிரஹ்ம சரியம்” அவனுக்கு எவ்வாறு சித்திக்கப் பெற்றது? வேதாகமங்களிலே இந்திரிய நிரோதம் செய்வது ப்ரஹ்ம சரியம் என்று கூறப்படுகின்றது. வேதாந்த சித்தாந்த பாடியக் கர்த்தாக்களும் தான் சைவர்களுந்தான் வீரியத்தை வெளிவிடாது அடக்கிக் கொள்வதே “நிரோதம்” என்பதன் பொருள் என்று கூறிவிட்டனரே! இதற்கு மாறாக என்பு உள்

உருக வேண்டும் என்று கூறிகின்றானே மாணிக்கம்.

திருவாசகம்

என்புள் ளுருக்கி யிருவினையை
[யீடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மை
[செய்து
முன்புள்ள வற்றை முழுதழிய வுள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை யாண்டானைக்
[கொண்டன்றே.

(ஷை குலாப்பத்து—செ. 3)

என்பு உருக வேண்டுமெனக் கூறாது என்பு உள் உருக வேண்டும் என என் கூறப்பட்டது? என்பு உள் உருகும் என்பதனால் ஆம் பயன் என்னை? என்பதனை அறிய வேண்டும். “என்பு உள் உருக்கி” என்று அருளிய மாணிக்கம் அதன் பயன் இன்னது தான் என்று அருளி இருப்பதையும் காணலாம். அஃதாவது:—இரு வினையின் ஈடழியும்—இருவினையில் உள்ள ஏற்ற இறக்கம் விடுபட்டு அவை சம மடையும். அஃதாவது இருவினையும் நிறை பெறும்—ஒப்பும் என்பது. இதனால் மலங்களால் ஆய துன்பங்கள் அனைத்தும் களையப் படும். அதனால் தன்னிலை முன்னிலை படர்க்கை என்னும் துவந்துவங்கள் தூய்மை அடையும்—அமலம் பெறும்—நீறும் என்று கூறப்பட்டது. அஃதாவது முன்னுள்ள சொரூபம் [முதல் கரு, உரிப்பொருள்] முழுமையும் கெட்டு—செத்து-சாகாமல் செத்து—திரிந்து வேறாக மாறும் என்பது; சுத்தமடையும்—அமலம் பெறும் எனினும் ஆம். அஞ்ஞான்றன்றோ அப்பன் உட்புகுவன். இஃதன்றோ பிரமத்தை அடையும் நெறி—பிரமமாகும் நெறி—வாய்மையான பிரமசரியம்!

பிரமசரியம் என்றால் என்னை? அதுதான் பிரமத்தை அடைதற்குரிய ஒழுக்கம்—பிரமமாதற்குரிய ஒழுக்கம் எனப் பொருள் படும். இவ்வொழுக்கமே பிரமமாதற்குரிய முக்கிய சாதனமாய் முதற்கண்ணதாய் அநுட்டிப்பதற்கு மிக அரிதாய் பெரிதாய் விளங்குதல் பற்றிப் பிரமசரியம் எனக் கிளந்து கூறப்பட்டது. இதனால் இவ்வொழுக்கத்தின் அருமை பெருமை நன்கு புலப்படும். இவ்வொழுக்கம் கைவரப் பெறுதலே பெரிய தவமாகும்—அறத்தாறாகும். இதனால் பிரமத்தை அடைதல் எவ்வாறு? அவ் ஒழுக்கந்தான் யாது? எனின், அதுதான் ஆசான் உரை வழி நின்று ஒழுகப் படும் வைதிக நெறியாகிய அருந்தல் பொருந்தல் என்று கூறப் படும். நமது இருதயமாகிய தகராகாசத்துள் அணு ரூபமாய் இருக்கும் பிரமத்தை விளைவேற்ற வேண்டும். அகத்தும் புறத்தும் தானும் தானல்லாததாயும் விளங்குவது பிரமம். ஆதலால் அகத்தே உணர்ச்சி வடிவாய் விளங்கும் பிரமத்தோடு புறத்தே முன்னிலையாய்—உணவாய் (அருந்தல் பொருந்தல்)—உணர்வாய் விளங்கும் பிரமத்தை நிறை கண்டு பஞ்சீகரணித்தலால் சேர்க்கவேண்டும்—சேர்த்து விளைவேற்ற வேண்டும் என்க. இஃதன்றி வேறு தடம் யாது? தத்துவப் பெரியாராகிய மெய்யடியார் எல்லாம் இத்தகைய வாய்மையான பிரமசரிய ஒழுக்கத்தை மேற்கொண்டு குரு உரை வழுவாது ஒழுகி உய்தியடைந்தோராவர் என்பதில் ஐயமுண்டோ? பின் வரும் பிரமாணங்கள் இவ் உண்மையை நன்கு வற்புறுத்துதல் கண்டு கொள்க.

திருவாய்மொழி

வாடினேன்வாடி வருந்தினேன்மனத்தால்
பெருந்துயரிடும்பையிற் பிறந்து
கூடினேன்கூடி இளையவர்தம்மோடவர்
[தரும்கலவியேகருதி
ஓடினேனோடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதந் தெரிந்து
நாடினேன்நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னு நாமம்.

(ஷை திருமங்கை ஆழ்வார்.)

அப்பர்

விளைவறிவிலாமையாலே வேதனைக்
[குழியிலாழ்ந்து
களைகணு மில்லேனெந்தாய் காமரங்
[கற்றுமில்லேன்
தளையவிழ்கோதைநல்லார்தங்களோ
[டின்பமெய்த
இளையனுமல்லேனெந்தாயென்செய்
[வான்றோன்றினேனே.

(ஷை குறைந்த-திருநேரிசை, 9.)

திருமந்திரம்

பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாகி பராஞ்சுடர்ச் சோதி
யயனொடு மாலறி யாவகை நின்றிட்
டுயர்நெறி யாயொளி யொன்றது வாமே.

(ஷை 9ம்-தந். ஆகாசப் பேறு, 4.)

இவ்வாறு மெய்யடியார்கள் அருளியிருக்கின்றனர் அல்லவா? பெண்களை விட்டு ஒருபால் ஒதுங்குவதால் பிரமமாதல் கைகூடுமா? பிரமத்தை விளைவேற்றுதலாகிய பிரமசரிய ஒழுக்கம் கைகூடுமோ? “உணர் வெனும் பெரும் பதம்” தெரியவருமா? அமலம் ஆக்கமுறுமா? என்பு உள் உருகுவது என்றால் என்னை? என்பு உள் என்பது யாது? என்பு உள் இருப்பது ஆறும் தாதுவாகிய “மஜ்ஜை” அல்லவா? அவ் ஆறும் தாது உருகி உருகிப் பக்குவப் படுவது அல்லவா—தூய்மை அடைவது அல்லவா இரு வினையின் ஈடு அழியும் மார்க்கம்! அவ் ஆறும் தாதுவின் சாரம் அல்லவா ஏழாம் தாது எனப்படும் வீரியம்—சுக்கிலம்!

இந்திரிய நிரோதம் என்பது என்னை? இந்திரியத்தை வெளிவிடாது அடக்குவதால் “நிரோதம்” சித்திக்குமா? அதன்பால் உள்ள கசிவு—ஓதம்—அழுக்கு அகலுமா? பெண்கள் போகமே “ஓதமலி நஞ்சு;” ஓதம் என்றால் என்னை? அவ் ஓதமலி நஞ்சை உண்டவன் யார்? அவன்தான் சிவன். நஞ்சை உண்பது என்றால் எப்படி? ஓதம் நிறைந்த நஞ்சு ஆதலால் அவ் ஓதத்தை நீறச் செய்து உண்ண வேண்டும்—

கொள்ள வேண்டும். அஃதாவது சிறிது சிறிதாக நிறை முறையோடு முன்னிலையாகிய நஞ்சை உண்பதனால் ஓதத்தை நீறச் செய்ய வேண்டும். அஞ்ஞான்று அல்லவா "நிரோதம்" என்னும் பதம் சித்தித்தது! சித்தித்தஞான்று வீரனானான்; வீரியனானான்; காமத்தை வென்றவனானான் என்க. இவ்வாறு நிரோதம் சித்திக்கப் பெறாவிடின் என்னையோ? எனின், அவன் பிணி மூப்புக்களால் சாதலடைவன் என்க. இந்திரிய நிரோதம் சித்திக்கப் பெற்றவனே "வேள்" எனப்படுவன். இவன் சரீரமே வேளூர் என்க. தன் சரீரம் வேளூராக அமையப் பெற்றவன் இவனே. வேள் + ஊர் — வேளூர். புள் இருக்கும் வேளூர். இவ்வூரை அடைந்தால்—சரீரம் வேளூராகஅமையப் பெற்றால் வயித்தியநாதன் ஆவான். ரோகங்களை நீறச் செய்யும் ஆற்றல் இவனுக்கு உண்டு. இவனிடத்திற்றான் "புள்" இருக்கிறது "புள்" என்றால் என்னை? ஆய்ந்து உணர வேண்டும். இது தான் "உணர்வெனும் பெரும் பதம்"—உணர்ச்சி—உணர்ச்சி வடிவாகிய "கந்து"— சிவம் என்க. சிவோகம் தலைக்கூடப் பெற்றவன் இவனே. சிவமானவன் இவனே. இவனே ஆலத்தை அமுதமாக்கியவன்—சிவன் என்க. நஞ்சை உண்டால்—இந்திரிய நிரோதம் சித்திக்கப்பெற்றால்—விந்து சரீரத்துள் உறையப்பெற்றால்—அடங்கினால் சிவோகம் விளையும் என்க. இது பற்றியே

திருமந்திரம்

விந்துவு நாதமும் விளைய விளைந்தது
வந்தவிப் பல்லுயிர் மன்னுயி ருக்கெலா
மந்தமு மாதியு மாமந்தி ரங்களும்
விந்து வடங்க விளையுஞ் சிவோகமே.

(ஷை—7-ம் தந். விந்து ஜயம் 33.)

என்றார் திருமூலர் என அறிக.

உலகம் ஆண் பெண் என இரண்டு வகையாக விளங்குகின்றது. இவ்விரண்டும் ஒன்றைமற்றொன்று கவர்ந்து கொண்டு இருக்கின்றன. இரண்டும் கூடிக் குழைகின்றன, இன்பம் நுகர்கின்றன; இன்பத்தைப் பருகி உய்கின்றன; இன்பத்தின் பொருட்டாகவே அசைகின்றன. அரை வயிறு கால் வயிறு நிறைய உண்போரும் இவ்வின்பத்தினையே விழைகின்றனர்; கிட்டாவிடின் வருந்துகின்றனர். உலகியலுக்கு ஐ இதுவே—உலக இயற்கை இதுவே என்க. இதனை மாற்ற எவராலும் ஆகாது. "பிரமசாரி" எனக் கூறிக் கொண்டு கௌபீனத்தைச் சிக்கெனயாத்துக் கொண்டாலும் உலகியல் அவனை விடாது. அவன் தான் அதி காமி. சொப்பனத்தில் காயப் பெண் அவனைக்கட்டி அணைந்து புணர்வள். அஞ்ஞான்று அறத்தாறு நுவலும் பூட்கை இதுவே என நினைந்து மெத்தச் சுகமாக அநுபவித்து விழிப்பு வந்ததும் தன் கௌபீனம் "நிரோதம்" பெறாத அசுத்த வீரியத்தால் நனைந்திருப்பது கண்டு ஐயோ! சிவமே! என்று அயர்வுற்று வேதனைக்கு ஆளாவான்; தான் கொண்ட வேடத்துக்குப் பங்கம் வந்து விட்டதே என நினைந்து ஆந்தையைப் போல் விழிப்பன்; கௌபீன சுத்தி உடையவன் யான் எனக் கூறிக் கொள்வது பொய்யாயிற்றே என வருந்தி இச் சம்பவத்தைப் பிறர் அறியா வண்ணம் மறைப்பன். இவன் செயலைக் கண்டு—படிற்றொழுக்கத்தை கண்டு இவன் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும். இவன் தான் வஞ்ச மனத்தான்.

குறள்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் [பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

(ஷை 28 அதி—கூடா வொழுக்கம். செ. 1.)

என்றனர் பொய்யில் புலவர்.

ஆதலால் இவ் இன்பத்தை வென்று விட்டேன் என்பவன் மா வஞ்சகன்; மா பித்தன் என அறிதற்பாற்று.

நிறை முறையான இல்லற ஒழுக்கத்தினாற்றான் காமாதி கஷாயங்கள் நீங்க வேண்டும் — ம்ருதமடைய வேண்டும் என்க. அழுக்கை அழுக்காலன்றிப் பிறவாறு அகற்றுவது அசம்பாவிதம். இதனால் இனமான முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்தே உய்தியடைய வேண்டும் என்பது நன்கு பெறப்படும். நிறை முறையான சிற்றின்ப நுகர்ச்சியினாற்றான் உடலில் உள்ள அசுத்த நிறை நீங்க வேண்டும். அமல நிறை ஆக்கமுற வேண்டும்—பேரின்ப முளை அங்குரம் பெற வேண்டும் என்க. ஊனம் நீங்கி ஒளி பெற வேண்டும் என்க. பின் வரும் பிரமாணம் வாய்மையான பிரமசரிய ஒழுக்கத்தால் காமக் குரோதம் ம்ருதமடைவதை — ம்ருதமடைந்து மாறுவதை நன்கு புலப்படுத்தும்:

சாந்தோக்கிய உபநிடத தாற்பரிய வர்ணனம்.

"எக் கடுக்காய் முதலியவற்றால் உண்
"டாய ரச சம்பந்தத்தானே வஸ்திர
"தியில் சிவப்பு முதலிய நிறங்கள் மிக
"வலியவாமோ அவ் இரசத்தை மதி
"மான் "கஷாயம்" என்பன். அவ்
"இரசம் போல் காமக் குரோதாதி
"விகாரமும் சித்த ரூப வஸ்திரத்தை
"இரஞ்சிதமாக்குதலின், காமாதியை
"யும் நூலுணர்ந்தோர் "கஷாய" சப்
"தத்தால் கூறினர். வஸ்திரத்தின்
"கண்ணே இருக்கும் கஷாய ரசம் உவர்
"மண் முதயவற்றானே நீங்குவதே
"போல, காமாதி கஷாயங்களையும்
"ப்ரஹ்ம சரியாதி சாதனங்களால் நீக்
"கலாம்.

"நாரதர் ப்ரஹ்ம சரியாதி சாதனங்
"களோடு கூடியவரும் சம்சார சமுத்
"திரத்தினின்றும் வைராக்கிய முடை
"யவருமாவர். ஆதலின் சுருதி பக
"வதி நாரதரை "ம்ருத கஷாயர்"
"என்றனள்."

பண்டைக் காலத்து இருடிகளும் முனிவர்களும் மெய்யடியார்களும் வாய்மையான இல்லற ஒழுக்கத்தால் "இந்திரிய நிரோதம்" செய்து பாசங்களை

பெண்பாற் புலவர்கள்

யாழ்ப்பாணம் வேலணையூர்,
பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம்
அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே உரியது)

(25-ம் வாரத்தொடர்ச்சி)

மாறோக்கத்து நப்பசலையார்

இம்மெல்லியலார் புறநானூற்றில் பாடிய பாடல்களில் மூன்று சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பற்றியவை; ஒன்று மலையமான் திருமுடிக்காரியைப்பற்றியது; இன்னொன்று அவன் மகனாகிய மலையமான்சோழிய வேனாதி திருக்கண்ணனைப் பற்றியது; வேறிரண்டு இன்னாரைப் பற்றிப் பாடியவை என்பது அறியப்படாதன. இவையெல்லாம் சொன்னயம் பொருணயங்களோடு மிளிர்வன.

இவர் ஒருமுறை பாவேந்தர்தமை யோம்பிய பார்வேந்தனும், பல்லிசை கொள் கல்விசைப்புலமை உடையவனும், ஆண்மையும் வீரமும் மிகப் படைத்தவனும், போர் செய்வதிலதி விருப்புடையவனுமாகிய சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடஞ் சென்றார். வளவனும் இம்மெல்லியலாரை நகைமுகத்துடன் இன்சொற் கூறி வரவேற்று உபசரித்தான். உடனே இவர் அவன்றன் வீரத்தைப் புகழ்ந்து பின் வரும் கருத்தமைந்த தொரு பாடலைப் பாடினர்.

'புறவுற்ற துயரத்தைப் போக்கிய வெள்வேல் தாங்கிய சினம்மிக்க சோழர் மரபினுதித்த அரசே! செம்மந்தாய்!! முதலைகள் செருக்குடன் வாழும் குழிந்த இடத்தினையுடைய அகழியினையும், நடுச்சாமத்தில் ஊர்காவலருடைய விளக்கு கிழலைக் கவரும் கொடிய மாறுபாடுடைய முதலைவாழும் நீர்மிக்க மடுவையும், செம்பு போன்ற மதிலையுமுடைய தலைமையுடைய பழைய ஊரின் கண்ணே கச்சணிந்த யானையையுடைய அரசுண்டு ஆகையினால் அவற்றை நல்லனவென்று நினையாது, நஞ்சினையுடைய வெண்பற்களையுடைய கோபம் மிக்க ஐந்தலை நாகம் புக்கதாக வானத்திலே தீப்பிறக்குமாறு பெரியதொருமலை முழையிலே இடியேறு பொருதினாற் போல அழித்தல் வல்லையாய் இருந்தாய்.'

இச் செய்யுளில் ஐந்தலை நாகத்திற்குப் பகை அரசரை ஒப்பிட்டும் இடியேற்றிற்கு வளவனை ஒப்பிட்டும் கூறப்பட்டிருத்தலும், புறவின் துயரம் தீர்த்த குடியிற் பிறந்தாய் ஆயினும் இவற்றை நல்லவென்று பாராது அழித்தல் வல்லையாயிருந்தாய் என அவன் மறத்தினை வியந்து கூறப்பட்டிருத்தலும் கவனித்தற்குரியன. இதனைக்கேட்ட வளவன் இவரைப் பெரிதும் பாராட்டினன்.

பற்றுக்கள் அற்று வாய்மையான பிரமசரியம் சித்திக்கப் பெற்று சம்சார சாகரத்தினின்றும் கரையேறி உய்தியடைந்தவரேயாவர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

பிரமசரியமே இன்னது என அறியாதாருக்கு வேதம் பயன் தருமா? அகப்பொருளில் கூறப்படும் "மன்றல் எட்டு" என்பதன் உண்மை புலப்படுமா?

இந்து மதம் என்றால் என்னை? இதனை யாவரும் அறிந்திருப்பாரல்லவா? அறிந்திருக்கவேண்டியது அல்லவா? சைவமதம் என்றால் என்னை? மதம் என்னும் சப்தத்துக்குப் பொருள் கண்டார் உண்டோ? இன்னோரன்ன இரகசியங்களெல்லாம் பலர்க்கும் மறைந்து கிடக்க, மதத்தையோ சமயத்தையோ அறியாமையால் தூஷிப்பவர்மீது சீற்றங் கொள்வதால் பயன் என்னை? அவ்வரைவசை மொழிகளால் தோத்திரம் செய்வதன் காரணம் தான் என்னை?

ப்ரஹ்ம சரியம் சித்திக்காமல் கிருஹஸ்தனாதல் முடியாது. இது வேத வழக்கு. தற்கால மாந்தருள்ளே— "சமாதி" என்று புதைக்கப்பட்டவருள்ளே—சுட்டு எரிக்கப்பட்டவருள்ளே இக்கிரம முறையைப் பெற்றவர் உண்டோ? உபநிடதங்களில் கூறப்பட்ட இலக்கணம் அன்னாரிடம் அமையப் பெற்று இருக்கின்றதா? இருந்ததா?

விரியத்தை நிரோதம்செய்தவனுக்குப் பிணி மூப்புச் சாக்காடுகள் உளவாகலாமா? ஆம் எனின், பிரமாணம் யாது? அறிஞர் இவற்றை ஆராய்ந்து உண்மை சடைப்பிடிப்பாராக.

இதுகாறும் கூறியவைகளால் உலகியலாகிய பிரமசரியம் முதலிய நிலைகள் போலியே என்பதும், வாய்மையான பிரமசரியம் இன்னது என்பதும் ஒருவாறு உணரத் தகும். ஏனைய இருநான்கும் முதலிய நிலைகளின் உண்மை அமயம் நேரும் போது விளக்கிக் கூறப்படும்.

சுபம்.

இவர் சிலகாலம் வளவனுடனுறைந்து அவனுடைய கொடை, வீரம், முறை செய்தல் முதலியவற்றை நன்கு கண்டு, மிகுந்த மகிழ்ச்சியினராய்

"புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோல்நிறை துலாஅம் புக்கோன் மருக
ஈதல்நின் புகழுமன்றே; சார்தல்
ஒன்னார் உட்கும் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர்
[நினைப்பின்
அடுதல் நின் புகழும் அன்றே; கெடுவின்று
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறநின்று நிலையிற் றாகலின், அதனால்
முறைமைநின் புகழுமன்றே மறமிக்கு
எழுசமங் கடந்த எழுவுறழ் திணிதோள்
கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ,
யாங்கனம் மொழிகோ யானே! ஓங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்
[கோட்டு
இமயஞ் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன்
[தொலைய
வாடா வஞ்சி வாட்டும் நின்
பீடு கெழு நோன்றாள் பாடுங்காலே"

எனுஞ் செய்யுளைச் செப்பினர்.

இதன் பொருள்:—புறவினது வருத்தத்தைப் போக்கவேண்டி யானையின் வெள்ளிய கொம்பால் கடைந்து அமைக்கப்பட்ட வெள்ளிய கடையையுடைய கோலாகிய துலாக்கோலில் தான் ஏறிநின்ற சிபி எனும் சோழன் மரபிலுள்ளாயாதலால் இரந்தோர்க்கு ஈவது உனக்கு இயல்பாவதல்லது புகழாகாது. அசுரர்க்குப் பகைவராகிய தேவர்கள் கிட்டுதற்கரிய மிக்க வலியையுடைய ஆகாயத்துத் தூங்கெயிலை அழித்த நின் முன்னோரை நினைப்பின், கண்டு எதிர்த்த பகைவரைக் கொல்லுதல் உனக்குப் புகழாகாது. கேடின்றி மறம் பொருந்திய சோழரின் உறையூரின் கண்ணுள்ள நியாய சபையிலே அறம் நின்று நிலைத்ததாகையால் முறைமை செய்தல் நினக்குப் புகழுமல்ல. ஆதலால் மறம்மிக்கு எழுந்த போரை வென்ற கணைய மரத்தை யொத்த தோளினையும், கண்ணுக்கினிய ஆத்திமாலையையும் மருஞ் செருக்கிய குதிரையையுமுடைய சோழனே! உயர்ந்த எல்லை அளந்தறியப்படாத பொற் சிகரங்களையுடைய இமயமலையிற் சூட்டிய காவலாகிய விற்பொறியையும் சிறந்ததொழிற்பாடுடைய தேரையுமுடைய சேரன் அழிய அவனது அழிவற்ற கருவூரை அழிக்கும் நினது பெருமை மிக்க வலிய முயற்சியைப் பாடுங்கால் யான் யாங்ஙனம் பாடுவேன்? என்பது.

இச் செய்யுளால் பண்டைக்காலத்தில் காணப்பட்ட துலாக்கோலின் அமைப்பும், சோழர் குலத்திலே முன் ஒருவன் தூங்கெயில் மூன்றை அழித்தான் என்பதும், உறையூரில் அறங்கூறு அவையம் இருந்ததென்பதும் இமயமலையின் உயரம் அளவிடற்கரியதென்பதும், அதில் பொற்சிகரம் இருந்ததென்பதும், அதில்சேர அரசர்கள் தம்வெற்றிக்கறிகுறியாக வில்லைப் பொறித்திருந்தனர் என்பதும், சிபி வேந்தனருஞ் செயலும் கிள்ளி வளவன் கருவூரைக் கைப்பற்றி இமயத்திற் புலியைப் பொறித்தான் என்பதும் பிறவும் அறியப்படும். இதனால் இந்நல்லிசைப் புலமை நிறை மெல்லியலார் தம் பரந்த அறிவையும் நுண்மாணுழை புலத்தையும் அறிந்து கொள்ளலாம்.

"வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல் விசும்பித் தூங்கும் எயிலும்தொலைத்தது" எனும் பழமொழியாலும் "தூங்கெயில் மூன்றெறிந்த சோழன் காணம்மானே" எனும் சிலப்பதிகாரத்தாலும் சோழவரசனொருவனே தூங்கெயிலெறிந்தவன் என்பதை அறியலாம். நிற்க

சிலயாண்டுகளால் வளவன் குளமுற்றத்தில் இறந்தான். இதனை அறிந்ததும் இவர் அங்கு சென்று புலம்பிப் பாடினர்.

'பொன்னலாகிய மாலையினையும்நெருங்கிய போரில் எதிர் நின்று வெல்லும் படையினையும் தேரையுமுடைய கிள்ளி வளவனைக் கைக்கொண்ட கூற்றுத் தன் மனத்துள்ளே கறுவுகொண்டதாயினும், வெளிப்பட நின்று வெகுண்டதாயினும், உற்று நின்று கையோடு மெய்தீண்டி உயிர்வாங்கத் துணிந்திருக்குமாயினும் அது உயிரோடு வாழ்வு பெற்றிராது. பாடுவாரைப்போலத் தோன்றி கையாற் றொழுது வாழ்த்தி இரந்து உயிர் கொண்டதாக வேண்டும்' எனுங் கருத்தமைந்த ஓதுவார் கேட்பார் உள்ளத்தையும் வருந்தச் செய்யும்

"செற்றன் றாயினுஞ் செயிர்த்தன் றாயினு
முற்றன் றாயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
இரந்தன் றாகல்வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே"

எனுங்

கையறுநிலைச் செய்யுளை இவர் கூறினர்.

வளவனின் பெருவீரமும், இரந்தார்க்கு உயிரையும் கொடுப்பவன் என்பதும், இன்னும் இம்மெல்லியலார் தம் நன்றியறிதலும் அன்பின்றிறனும் பிறவும் இச் செய்யுளால் அறியக் கிடக்கிறது.

பின்னர் இவர் பெண்ணையாற்றங் கரையில் இருந்த சிறூர் ஒன்றன் தலைவனும், கபிலர் முதலிய முத்தமிழ்த்துறையின் முற்றப்போகிய முதுபுலவர்களால்புகழ்ந்து பாடப்பெற்றவனும், புலவரைப்போற்றி அவர்க்குத் தன்னிடமுள்ளவற்றைப் பகுத்துக் கொடுத்த வள்ளலுமாகிய மலையமான் திருமுடிக்காரியிடம் சென்று

'பகைவாது யானையின் முகப்பட்டத்திலுள்ள பொன்னைக்கொண்டு பாணர் தலையில் பொற்றாமரை மலரைச் சூட்டிய சிறந்த தலைமையினையும் புறக்கொடாத மேற்கோளினையுமுடைய பெரியோன் மரபிலுள்ளாய்! இராப்பொழுது தங்கி நித்திரை செய்தாலன்ன செறிந்த இருளையுடைய சிறுகாட்டையும் பறையொலி போலும் ஒலியையுடைய அருவியையுமுடைய முள்ளூர்க்குவேந்தே! முட்போன்ற நச்சுப் பற்களையுடைய பாம்புகளைக் கொல்லும் இடியேறுபோல் முரசு எழுந்து முழங்கத் தலைமை சிறந்த யானைகளோடு வேந்தர் போர்க்களத்தில் அழியப் பெரும்போர் செய்து பொருந்தாத பகைவரைத் தடுக்கும் பெண்ணையாற்றங் கரையிலுள்ள காட்டை உடையோனே!!! யாம் ஆற்ற லில்லாதவராயினும் இயன்றவளவு நின்புகழைப் பாடுவோமெனின் புலனழுக்கற்ற அந்தணாளராய கபிலர் பெருமான் எம்போல்வார் பாடமுடியாது நின் இசையை எல்லாம் அளந்து பாடிவிட்டனர். சோர்க்குரிய பொன்தரு நாவாய் மேற்கடலிலே போன பிறகு பிற நாவாய்கள் போக இயலாத வாறுபோல யாம் அப்புலவர் பாடிய பிறகு பாட வியலாதிருக்கின்றோம். எனினும் எம்முடை வறுமை துண்டலால் உனது வண்மையைப் புகழ்க்கருதி இயன்றவளவு பாடுகின்றோம்.

(எமது பாடலையும் ஏற்றுக்கொள்வாயாக)" எனுங் கருத்தமைந்த

"ஒன்னார் யானை ஓடைப் பொன்கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ
வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்
ஓடாப் பூட்கை உரவோன் மருக
வல்லேம் அல்லேம் ஆயினும் வல்லே
நின்வயிற் கிளக்குவம் ஆயிற் கங்குல்
துயில்மடிந் தன்ன தூங்கிருள் இறும்பிற்
பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந்
தெறலரு மரபினின் கிளையொடும்
பொலிய
நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்தணா ளன்
இரந்து செல்மாக் கட்கினி யிடனின் றிப்
பரந்திசை நிற்கப் பாடினன் அதற்
[கொண்டு
சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலஞ் செல்கலா தனையேம் அத்தை
இன்மை தீரப்ப இசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தனம் யாமே
[முள்ளெயிற்
றரவெறி யுருமின் முரசெழுந் தியம்ப
அண்ணல் யானை யொடுவேந்து களத்
[தொழிய
அருஞ்சமம் ததையத் தாக்கி நன்று
நண்ணுந் தெவ்வர்த் தாங்கும்
பெண்ணையம் படப்பை நாடு கிழவோயே!"
எனுஞ் செய்யுளை இசைத்தனர்.

இச்செய்யுளில் கபிலரைப் புகழ்ந்து கூறிய அடிகளும் அவர் பாடலுக்குப் பொலந்தரு நாவாயையும்பிறபுலவர் பாடல்களுக்குப் பிறகலத்தையும் ஒப்பிட்டுக் கூறிய அடிகளும் மிகவுஞ் சிறந்தன.

இச்செய்யுளிலுள்ள

"நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்தணாளன்
இரந்து செல்மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்"

எனுமடிகளாலும்

இவரது இன்னோர் செய்யுளிற் காணப் படும் "பொய்யா நாவிற் கபிலன் பாடிய மையணி நெடுவரை" எனுமடிகளாலும் இவர் கபிலர் பெருமானிடம் கொண்டிருந்த பெருமரியாதை வெள்ளிடையாகும்.

இவ்வாறு மலையமானைப் புகழ்ந்து பாடி அவனுலுபசரிக்கப் பெற்று அவன்நாட்டில் சிலநாள் வதிந்தனர். பின்னர் தம் ஊர்க்குச் சென்று சிலவாண்டுறைந்து மறுமுறையும் அவனைச் சந்திக்க எண்ணி அவனூர்க்குச் சென்றபொழுது மலையமான் இறந்துவிட்டனன். அவன் மகன் சோழிய வேனாதி திருக்கண்ணன் தலைமை பூண்டிருந்தனன். திருக்கண்ணன் சோழனின் படைத்தலைவனாயிருந்து அந்நாளிற் சோணாட்டில் நடந்த பெரும் போர்களில் சோழர்க்குத் துணைசெய்து புகழ்படைத்தவன். ஏனாதி எனும் சிறப்புப் பட்டமும் பெற்றவன். இவற்றை அறிந்த மெல்லியலார் அவனைப் புகழ்ந்து

"பிறரை வருத்தும் அச்சமுடைய அசுரர் கொண்டு போய் மறைத்ததினால் செய்மைக்கண் விளங்கும் தலைமையினையுடைய ஞாயிற்றைக் காணாமையால் உலகத்தாருடைய கண்களை இருள் மறைக்க, இவ்வாறு சேர்ந்த துன்பம் உலகத்தை விட்டு நீங்க வலிமைமிக்க அஞ்சனவண்ணனாகிய திருமால் அந்த ஞாயிற்றைக் கொண்டுவந்து எங்கும் பரவிய இருள் அழிய ஆகாயத்தில் நிறுத்தியவாறுபோலப் பகையரசரோடு போர் செய்து தோற்றுப்போனதால் தம் மன்னனை இழந்து வருந்தும் துன்பக்காலத்தில் முரசுமுழங்கும் கோயிலகத்தும் பெரிய காவிரியையுடைய சோணாட்டகத்தும் பரவியதுயர் கெடும் வண்ணம் பொய்யாத நாவினையுடைய கபிலராற் புகழ்ந்து பாடப்பட்ட முள்ளூர் மலையினுச்சியில் பிறராற் காண்டற்கரிய இடத்திலிருந்த சோழனது திங்கள் போன்ற வெண்குடையைத் தோற்றுவித்து அக்குடையைப் புதுமையுண்டாக நிலைபெறுவித்த புகழ்பெற்ற தலைவனே! மலைக்குகையில் வாழும் புலியை எழுதிய கொடியையுடைய கோட்டையையும், அழகிய ஆபரணங்களையும் வண்டு படு கண்ணியையும் பெரும் புகழையுமுடைய முன்னோனாகிய நின்தந்தை இவ்வுலகிற் செய்த நல்லறத்தின் பயனைத் தேவருலகில் நுகர வேண்டிப் போயினன். ஆதலினால் துன்பமுற்றோர்க்கெல்லாம் இன்பம் பெருக்குமாறு நீ தோன்றினும். நின்தோற்றம் மலைபொடியக் காடு தீப்பதக்க நீர்நிலைகள் வற்றிவறள கோடைநீடிய பசுமையற்ற காலத்தில் நிலைக்குழியப் பெருமழை பொழிந்தது போலாகும்" எனுங்கருத்தமைந்த ஒரு பாட்டினைப்பாடினர்.

இச் செய்யுளில் திருக்கண்ணன் முள்ளூர்மலைமேல் சோழர் குடையைப் பிடித்ததை அஞ்சன வண்ணனாகிய திருக்கண்ணன் உதயகிரியில் ஞாயிற்றை உயர்த்தியதற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருப்பது நன்னயஞ் செறிந்து மிளிர்கின்றது.

"அணங்குடை யவுணர் கணங்கொண்
[டொளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது
இருள்கண் கெடுத்த பரிதிஞாலத்து
இடும்பை கொள்பருவரல் தீரக் கடுந்திறல்
அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு"

எனுமடிகளில் கூறப்பட்ட கதை எப்புராணத்தில் உளதோ தெரியவில்லை

"ஈண்டுச் செய்வினை ஆண்டுச்சென் றுணீ
[இயர்
உயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தனன்"

எனுமடிகளால் இப்புலவர் வைதிக மதத்தினர் என்பதறியக் கிடக்கிறது.

(தொடரும்)

அறிவிப்பு

கடிதர்களின்
அபிப்பிராயங்களுக்கு
அவர்களே பொறுப்பாளிகள்

"வித்தகம்"

வருட சந்தா விவரம்

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3–0–0
மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4–0–0

வித்தக நிலயம்,
புதுச்சேரி.

Sandhanam Printing Works Pondicherry. Le Gérant, R.Nagarattinam